# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண். 7/2020

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 03–07–2024.

பெயர் = சந்திரபாண்டியன் வா.சா.–2

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) இவ்வழக்கு பற்றிய விவரமும், வாதிகள் பற்றிய விவரமும் தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் தெரியும் என்கிறார் சாட்சி. நான் எந்த தெருவில் வசிக்கிறேன் என்றால் கிழக்குத் தெரு கடைசியில் வசிக்கிறேன். வாதி வீட்டிற்கு தெரு கிடையாது. எனது வீட்டிலிருந்து வாதி வீடு சுமார் 300 மீட்டர் தூரத்தில் இருக்கும். வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா? என்றால் பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்கிறார் சாட்சி. வழக்கில் எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்றால் தெரியாது. வழக்கில் எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்று எனக்குத் தெரியாததால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(2) வாதிகளுக்கும் , பிரதிவாதிகளுக்கும் என்ன பிரச்சினை என்றால் பாதை சம்மந்தமான பிரச்சினை என்கிறார் சாட்சி. வாதிகள் எதற்காக பிரதிவாதிகளுடன் தாவா செய்கிறார்கள் என்றால் பாதை கேட்டு தாவா செய்கிறார்கள் என்கிறார் சாட்சி. வா.சா.ஆ.3–ல் பாதை உள்ளதா? இல்லையா? என்றால் இல்லை. பிரதிவாதிகள் கட்டடம் கட்டப்போவதாக என்னிடம் எதுவும் சொன்னார்களா? என்றால் இல்லை. இவ்வழக்கு பற்றிய விவரம் எதுவும் எனக்குத் தெரியவில்லை என்றும், வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் வீடு கட்டும் இடத்திற்கு வடக்கே வீதி செல்கிறது. வாதிகள் வீடு எங்கே உள்ளது என்றால் பிரதிவாதிகள் வீட்டிற்கு தெற்கே உள்ளது.

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் 1, 2 பிரதிவாதிகளின் கு.வி. யை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.